# சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய ஈடுகாட்டிய அடமானக் கடன் பத்திரம்

201_ம் வருடம், மாதம் ம் நாள், __________________ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு._________ அவர்களின் குமாரர் சுமார் _________ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____)ஆகிய உங்களுக்கு

______________ என்ற விலாசத்தில் வசிக்கும் _________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._________ ஆகிய நான் (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) என் மனப்பூர்வமான சம்மதத்துடன் எழுதிக் கொடுக்கும் சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய அடமான ஆவணம் என்னவென்றால்,

இந்த சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய அடமானக்கடன் பத்திரத்தில் சொத்து விவரத்தில் விவரமாக குறிக்கப்பட்ட சொத்தான __________________________________ எனது சொந்தத்திலும் சுவாதீனத்திலும் இருக்கும் சொத்தாகும்.

சொத்து விவரத்தில் கண்ட சொத்தை _____ சார்பதிவாளர் அலுவலகத்தில் 1 புத்தகம் ஆவண எண்.____/____ ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணப்படி சுத்த கிரையம் பெற்று, அன்று முதல் இன்று வரை எனது சொந்தத்திலும் சுவாதீனத்திலும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வருகிறேன்.

தற்போது எனது குடும்ப தேவைகளுக்காக பணம் தேவைபடுவதால் இதனடியில் சொத்து விவரத்தில் குறிக்கப்பட்ட எனக்கு சொந்தமான சொத்துக்களை தங்களுக்கு சுவாதீனம் செய்து ஈடுகாட்டிய அடமான கடனாக ரூ.____________ (ரூபாய் ) உங்களிடமிருந்து ரொக்கமாக _________ ஆகிய இன்றைய தேதியில் பெற்றுக் கொண்டு விட்டேன் என உறுதி கூறுகிறேன்.

எனவே இன்று முதல் இந்த அடமானத் தொகையான ரூ.____________ (ரூபாய் _____)யை _____ வருடத்திற்குள் தங்களிடமோ தங்களின்

வாரிசுகளிடமோ / அதிகாரம் பெற்றவர்களிடமோ தவறாமல் திரும்ப வழங்கி சொத்தின் சுவாதீனத்தை மீட்டுக்கொள்ள சம்மதிக்கிறேன்.

மேற்படி அடமானத் தொகையை நான் கொடுக்க தவறினால் தாங்கள் என்மீதும் சொத்து விவரத்தில் கண்ட சொத்தின் மீதும் தக்க நடவடிக்கை எடுத்து கொள்ளவும் மற்றும் Transfer of Property Act Sec.69 மற்றும் 69A-படியும் நடவடிக்கை எடுத்து அதற்கான செலவுகளுடன் சேர்த்து மொத்த தொகையையும் நீங்கள் என்னிடமிருந்து வசூல் செய்துக் கொள்ளவும் நான் மனப்பூர்வமாய் சம்மதிக்கின்றேன்.

இந்தப்படிக்கு நான் என் மனப்பூர்வமான சம்மத்துடன் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்மதித்து எழுதிக் கொடுத்த சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய அடமான கடன் பத்திரம்.

## சொத்து விவரம்